Librarian
U. of Jaffna.

News and Articles in Tamil and English
Please send them to:
THE EDITOR,
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

RECEIVED
Periodicals Division

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q / J / 104 / News / 89
*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*
**Vol: 155 Jaffna, Friday 26, August 1994 No: 18**
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs.100/-
*For Advertisements*
*Apply to:*
THE MANAGER
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# The Government And The Opposition Should Reach A Consensus To Solve The Ethnic Problem

— Religious Dignitaries

**Religious dignitaries in a letter to the President have requested that the government and the opposition must reach a consensus towards solving the ethnic problems**

**They further stated that no single party will be able to accomplish this task.**

**This dourment has been signed by many religious leaders including Ven. Mapa-llama Vipulasara Thero, Ven· Madugama Vajiragura Thero, Rt Revd Kenneth Fernando (Chairman - NCC). Fr. Tissa Balasuriya and Revd Rienzie Perera (General Srecetary - NCC).**

---

## Kamban Festival

Grand Kamban festival was celebrated with full enthusiasm from July 20 th to July 24 th at Nallur. The great Poet Kamban and his epic Ramayanam were remembered with much respect. Several religious and educational dignitaries graced the occasion. Many people participated and witnessed the grand festival.Prof. Thurairajah. Former Vice-Chancellor of the University of Jaffna was awarded ' Mahara Yarl Award'' Poshumously This award was received by two of his children.

## *CONFIRMATION SERVICES*

**Viswamadu**

Thirteen persons were confirmed as full members of the C S I Church, Viswamadu on Sunday the 31st July 1994 by our Bishop the Rt. Rev. Dr. S. Jebanesan whe Rev Antony Sawerimuthu, Torker in-charge, Viswamadu, presented the Candidate· A fellowship breakfast was held after the service

**Mankulam**

The Confirmation Service of the St. Andrew's Church, Mankulam was conducted at 4 30 p m. on Sunday the 31 st July 1994. The Rev. T. Thevanesan presented nine candidates, who were confirmed as full members of the Mankulam C.S I Church by the Bishop The service was followed by a fellowship tea in which members of the Mankulam Church and some Diocesan officers participated.

---

## DR. JOHN SCUDDER
## 200th BIRTH
## *ANNIVERSARY*
## CELEBRATIONS

*SATURDAY SEPTEMBER 03, 1994*

PROGRAMME

| | |
|---|---|
| 8. 30 a m | Thanksgiving Service & Deacons Ordinations to Mr. K. A. Selvanayagam, Worker, Alaveddy & Sandilipay Churches. |
| | Mr T. Jeyachandra , Worker, Nunavil Church. |
| | Mr E N.Lawrence, Worker, Chavakachcheri Church. |
| | Mr. K.E. Jeyarajah, Worker, Cheddikulam Church. |
| 11. 00 a.m | Public Meeting at Ottley Hall. |
| 2. 00 p.m | Drama on the life of Dr John Scudder by Christian Theological Seminary, Chunnakam. |

## *Ecumenical Partnership Programme*

The on going Partnership programme between the J.D C S.I. and the churches in Berne, switzerland was further stengthened by the recent visit made by the Revd. Mrs. A. R.Tampiyappa.

The common task as outlined in the preamble is to share in the building of a worldwide "multinational cooperation of hope." The programme aims towards a just, participatory and sustainable society which involres the poor finding for themselves a voice, power and freedom.

Revd Tampiyappa was able to visit the Swiss Foreign Office, Department of Refugees ' She also had the opportunity to speak at UNHCR in Geneva, in the unit for Sri lanka

According to Revd Andreas Schmutz, over a thousand Tamil refugees and Swiss people took part in a seminar in a church in Bern, He further states "through this we have tried to collect the power to stop the current tepatriation" Revd Tampiyappa. was accompanied by Mr Kingsley Tampiyappa. Both visited Australia prior to this programme on their own and were able to rvisit members of their family and friends of our Diocese

---

## SERVICES OF THANKSGIVING

**Arthur Ganeshapillai Joseph**

A Service of Thanksgiving for the life of Arthur Joseph was held at his residence on August 10. 1994 The Service was conducted by the Revd S S Karunairaj of St.Peter's Methodist Church Tributes were paid by Mr Sathy Gulasingham, member of Vannarponnai Methodist Church and by Messrs. Pathmanathan (University of Jaffna)and M Arunasalam (Principal, Manipay Memorial School).

The Revd. S.S Terrence preached the sermon and the final prayer and benediction were offered by the Revd D S Thiagarajah A fellowship lunch followed

Arthur Joseph had been a longstanding teacher at Memorial School, Manipay and J/Vitheeswara Vidyalaya During his career at Memorial, the school won the national award for athletics He leaves behind his wife Selvadevy Joseph

**Mrs. Nesmmah Ponnuthurai**

A Service of Thanksgiving for the life of Nesammah Ponnuthurai, wife of the late E. V. Ponnuthurai of Tellippalai Was held at her daughter Mahil Selvarajah,s residence on August 13, 1994 at 4.00 p m.

The Revd S S Karunairaj who conducted the service also preached the sermon The lesson was read by theRevd. S S.Terrence. The Revd V. Rajkumar, presbyter of CSI Church, Tellippalai offered the opening prayer and service came to a close with the prayer and benediction pronounced by the Revd D. S Thiagarajah.

The members of the family hosted all those present to a fellowship tea

---

## Jaffna College Institute Of Agriculture

The Institute has been successful in recent years with several useful publications which are used widely by Agricultural Students in schools and the General Public. The most recent publication is entitled "INTEGRATED FERTILIZER MANAGEMENT" authored by Mr M Kanthasamy, the most senior Agricultural Instructor on the Staff The earlier publications were "Our Experience, What We have Learnt, Agriculture Review and Crop Production - Techno-Guide

On Monday the 15th of August a Distant Education Trainee Agriculture Teachers for Trainee teachers from four cluster schools viz: Nallur, Jaffna, Velanai and Chavakachcheri was conducted at the Institute. A similar course was conducted for the Vadamaradchi cluster schools a few months ago.

---

### K.N.H Representative in Kilinochchi

Mr. DETLEF HILLER of the South Asia Department of the KINDERNOTHILFE visited Kilinochchi District on the 25 th, 26th, 27th and 28th July 1994 He saw the KNH Projects in the area and expressed satisfaction about the work done by Jaffna Diocese of the CSI.

---

### Lions Club Chunnakam

The Chunnakam Lions Club celebrated its fourth Charter anniversary dinner and installation of office bearers 1994 / 95 on Sunday 24th July at 5 00 p.m. at the residence of Lion A. Nallathamby, Urumpirai. This meeting was presided by the president Lion. T. Kugathasan The Chief Guest was Lion S. Ramakrishnan (Region Chairman Lions Club International - District 306 - B) and the Guest of Honour was Mr. Rajan Kadirgamar (Principal Emeritus - Jaffna College). The President Lion T Kugathasan in his presidential address mentioned some of the projects carried out during 1993/94 period Projects include donations of statio-

( Continued on page 4)

# செய்திச் சிதறல்

## ஆண்டு விழா

கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் 55வது ஆண்டுவிழா 20 - 08 - 1994 இல் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிகள் நற்கருணை வழிபாட்டுடன் ஆரம்பித்தன. அருட்திரு எஸ். பி. தேசகுமார் ஆராதனையை நடாத்தி, அருளுரையாற்றினார். அருட்திரு எஸ். எஸ். கருணைராஜ் ஆராதனையில் உதவிபுரிந்தார். நன்றி செலுத்தும் வழிபாடு உடுவில் மகளிர் கல்லூரியினால் நடாத்தப்பட்டது. அதில் அருட்திரு ஏ. ஜெயகுமாரன் அருளுரையாற்றினார். மாலை நேரப் பகிரங்க கூட்டம் திரு. ஏ. இராஜசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பரி. யோவான் கல்லூரி கனிஷ்ட பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் திரு. எஸ். பி. ஜீவானந்தம் அவர்களும், அருட்திரு எஸ். எஸ். கருணைராஜ் அவர்களும் உரையாற்றினர்.

---

## வலைப்பந்தாட்ட வீராங்கனைகள்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றபோது உடுவில் மகளிர் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்டோர் அணி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை அணியினரைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடினர். பாராட்டுக்கள்!

## உலக இறையியலாளர் மன்றம்

இன்றைய நாட்களின் தலைசிறந்த இறையியலாளர்கள் சமீபத்தில் அமெரிக்காவின் நியூஜேர்சியில் கூடினர். இம்மன்றத்தில் ஹான்ஸ் கூங், குஸ்டாவா குட்டியேரஸ், கார்ள் றாணர் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். பேராயர் அம்பலவாணர் இக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## குரு அபிஷேகம்

நெடுந்தீவு திருச்சபை ஊழியன் அருட்திரு ஜே. ஞானப்பிரகாசம் தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தில் குருவாக 11 - 08 - 94 அன்று கொழும்பில் பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன் அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஆராதனையில் அருட்திருவாளர்கள் எஸ். ஜெயநேசன், ஏ. ஜெயக்குமாரன் உதவிபுரிந்தனர். திருமறைப்பாடங்களை திரு. கே. எஸ். ஜோசேப், திரு வி. பத்மநாதன், அருட்திரு பி. ஜே. சூரியகுமார் ஆகியோரால் வாசிக்கப்பட்டன. அருட்திரு எஸ். ஜெயநேசன், அருட்திரு ஏ. ஜெயகுமாரன், அருட்திரு ஐசக் செல்வரத்தினம், அருட்திரு சாம் ஜோஷியன், அருட்திரு சூரியகுமார் ஆகியோர் பேராயருடன் கூட புதிதாகத் திருநிலைப்படுத்தப்பட்டவரின் தலையில் கைகளை வைத்தனர். பேராயரினால் அருளுரை வழங்கப்பட்டது. புதிய குருவானவரை உதயதாரகை வாழ்த்துகின்றது.

# நன்றி செலுத்தும் வழிபாடு

05 08 94 இல் தனது 70வது அகவையை அருட்திரு டி. ஜே. அம்பலவாணர் அடிகளார் கொண்டாடினார். இத்தினத்தில் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு பேராயத்தின் ஊழியர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு கிறிஸ்த சேவா ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்டது.

ஊழியர் சங்க செயலர் அருட்திரு எஸ். சி. ஆர்ணல்ட் ஆராதனையை நடாத்தினார். கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினரால் தயாரிக்கப்பட்ட சிறப்பு ஆராதனை ஒழுங்கு உபயோகிக்கப்பட்டது. திருமறைப் பாடங்களை திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் அவர்களும், இறையியல் கல்லூரி மாணவன் திரு வி. எஸ். பதமதயாளனும் வாசித்தனர். நன்றி செலுத்தும் ஜெபமும், மன்றாட்டும் திருமதி கிருபா பவசிங்கத்தினால் ஏறெடுக்கப்பட்டன. அருட்திரு எஸ். பி. ஜெயசிங்கம் அவர்கள் அடிகளாரது சேவையைப் பாராட்டி, அவருக்கூடாக இறை புகழ் சாற்றப்படுவதை எடுத்துக்கூறி, ஊழியத்தின் மேன்மையை நிறுத்தி அருளுரையாற்றினார். ''நான் உமக்குச் சொந்தமானவன், இயேசுவே நீர் எனக்குத் தஞ்சமானவர்'' எனும் சிறப்புப்பாடல் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி பாடகர் குழுவினரால் பாடப்பட்டது. பேராயர் டி. ஜெ. அம்பலவாணர் அவர்களால் இறையாசி கூறப்பட்டது.

ஆராதனையைத் தொடர்ந்து அருட்திரு. அம்பலவாணர் அவர்களின் குடும்பத்தினரால் இறையியல் கல்லூரி மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட ஐக்கிய தேனீர் விருந்தில் அனைவரும் கலந்து கொண்டனர்.

இறைபணியில், எழுத்துத்துறையில், இலக்கியத்துறையில் அடிகளார் ஆற்றிய, ஆற்றிவருகிற சேவைகளை நினைந்து இறைவனுக்கு நன்றி செலுத்துவது அனைவரதும் கடமையாகும். உதயதாரகையின் தமிழ் பகுதி ஆசிரியராகத் தொடர்ந்தும் பணியாற்றிவரும் அடிகளார் ஆவியின் அனுக்கிரகம் பெற்று ஆண்டவரின் அருட்பணியில் உபயோகிக்கப்பட இறைவனை வேண்டுவோமாக.

'தியாகு'

---

# மாணவ தலைமைத்துவ அபிவிருத்திக் கருத்தரங்கு

மாணவ தலைமைத்துவ அபிவிருத்திக் கருத்தரங்கு யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்டன் மண்டபத்தில் கடந்த மாதம் 22ஆம், 23ஆம் ஆகிய தினங்களில் நடைபெற்றது. இதில் பதினாறு பாடசாலை மாணவ பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். மாணவ தலைமைத்துவப் பண்பை பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணக் கல்லூரி இளைஞர் அபிவிருத்திச் சங்கம் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தது.

சங்கானை கோட்டப் பாடசாலைகளும், நகரப்புற பாடசாலைகள் பலவும் இதில் கலந்து கொண்டன.

இக்கருத்தரங்கு யாழ். கல்லூரி அதிபரின் தொடக்க உரையுடன் ஆரம்பமானது. இக்கருத்தரங்கில் ''மாணவத் தலைவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள்'' என்ற பொருளில் வைத்திய கலாநிதி டி. டபிள்யு. ஜெயகுலராஜா அவர்களும்; நாடகத்தில் 'நடிகனாக ஆளுமையை வளர்த்தல்'' என்ற தலைப்பில் திரு குழந்தை. எம். சண்முகலிங்கம் அவர்களும்; ஒரு மாணவ தலைவன் எப்படி செயற்றிறன் உள்ளவனாக இருக்க வேண்டும் என்ற அம்சம் குறித்து சுண்டிக்குழி மகளிர் கல்லூரி உப-அதிபர் திருமதி எம். எஸ். தேவநாயகம் அவர்களும்; ஒரு இலட்சிய மாணவத் தலைவன்'' என்ற பொருளில் யாழ். கல்லூரி ஆசிரியர் திரு. அ. குமாரசுவாமி அவர்களும் மாணவ தலைவர்கள் அறிந்திருக்க வேண்டிய ''அவசரகால முதலுதவிகள்'' என்ற தலைப்பில் திரு. டபிள்யு. என். தேவகடாட்சம் அவர்களும் முதல் நாளில் சிறப்புரைகளை ஆற்றினார்கள்.

இரண்டாம் நாள் கருத்தரங்கு யாழ். கல்லூரி உப-அதிபர் வண. ஏ. ஏ. போல் அவர்களின் நற்சிந்தனையுடன் ஆரம்பமானது. அன்றைய தினம் மானிப்பாய் மெமோறியல் அதிபர், திருவாளர் ஏ. எம். அருணாசலம் ''பாடசாலைகளில் பிரச்சினைகளை இனங்காணலும் அவற்றிற்கான தீர்வும்'' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். ''மாணவ தலைமைத்துவம்'' என்ற பொருளில் மனித முன்னேற்றக் கழக இயக்குனர் வண. பிதா. எஸ். எச். ஜெயநேசன் அவர்களும் ''மாணவர் உளவள நலமும் அதற்கான வழிகாட்டலும்'' என்ற பொருளில் திரு. அருணகிரிநாதனும் உரை நிகழ்த்தினார். ''மாணவ தலைவர்களின் நடத்தை போக்கு'' என்ற பொருளில் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி. வை. பறகுணராசா உரை நிகழ்த்தினார். யாழ். தென்னிந்தியத் திருச்சபை பேராயத்தின் ஆயர் அதி வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன் 'பாடசாலை மாணவத் தலைவர்களின் பங்கு'' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். திருவாளர். ப. சயந்தகுமார், ரவி செந்தில்நாதன் ஆகியோர் ''உடலை உறுதியுடன் வைத்திருப்பது எப்படி'' என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றி உடற்பயிற்சியும் அளித்தனர்.

இக்கருத்தரங்கை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும் சங்க செயலாளருமான திரு. ஜி. நடராஜா அவர்கள் ஒழுங்கு அமைத்திருந்தார்.

# மனந்திரும்புதலுக்கேற்ற கனி

மனந்திரும்புதல் எனும் சிந்தனை லூக்கா ஆசிரியரின் நூல்களில் நன்கு இழையோடியுள்ளதை அவதானிக்கலாம். இயேசுவின் முன்னோடி யோவான் ஸ்நாநகன் முதலாக இச் சிந்தை இந்நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. லூக்காவைப் பொறுத்தவரையில் அனைவருமே மனந்திரும்ப வேண்டும் என்று கூறப்படுகின்றது. ஆண்டவர் பரத்துக்கெடுத்துக் கொள்ளப்பட முன்பு சீடருக்கு வழங்கும் கட்டளையின் ஒரு பகுதியாக இது அமைகின்றது. ''மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் சகல ஜாதிகளுக்கும் அறிவிக்கப்படவேண்டும்'' (லூக்கா 24:47). பவுல் அதேனே பட்டணத்தில் கூறுகிறார். ''இப்பொழுதோ எல்லா இடங்களிலுமுள்ள யாவருமே மனந்திரும்ப வேண்டுமெனக் கட்டளையிடுகின்றார்'' (அப் 17:30).

லூக்கா-அப்போஸ்தலர் நடபடிகள் ஆகிய நூல்களில் ''மனந்திரும்புதல்'' எனும் சொல் 11 தடவைகள் பெயர்ச்சொல்லாகவும் 11 தடவைகள் வினைச்சொல்லாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே, இச்சொல்லின் அர்த்தம், உபயோகம் ஆகியவற்றைப் புரிந்துகொள்வது மிக அவசியம். மனந்திரும்புதல் என்பது அடிப்படை மாற்றத்தைச் சுட்டி நிற்கின்றது. சிந்தையிலே ஏற்படும் தெளிவான மாற்றத்தை விளக்கி நிற்கின்றது. தவறு என்று ஒருவர் சொல்லுவது மட்டுமல்ல, கடவுளை நோக்கிப் புதிய முகமாகத் திரும்புதலும் இச்சொல்லின் அர்த்தத்தினுள் அடங்கும். இவ்விரண்டு அர்த்தங்களையும் சேர்த்து லூக்கா இன்னுமொரு அழுத்தத்தையும் காட்டுகின்றார். அதுதான் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனியைக் கொடுத்தல்.

இவ்வகையில் கனிகொடுக்கின்ற செயல் விளைவானது கடவுளை நோக்கித் திரும்புவதால் வரும் விளைவு மாத்திரமன்று உண்மையில், இரக்கத்தின் மிகுதியால் எம்மை நோக்கித் திரும்புகின்ற கடவுளுக்கு நாம் செய்கின்ற மாறுத்தரமே இச்செயலாகும். சங்கீதம் 103:8 இல் கூறப்படுவது. ''கர்த்தர் இரக்கமும், உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்''. எங்களுடைய பாவத்தன்மை மத்தியிலும், பலவீனங்களின் நடுவிலும் எங்களை நோக்கித் தம்முடைய முகத்தைத் திருப்புகின்ற கடவுளை நாம் எதிர்கொள்ளுதலுக்கான குறியீடே 'மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுத்தல்'' என்பதாகும். சத்துருக்களின் அன்புகூருவது, பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்வது, சபிக்கிறவர்களை ஆசீர்வதிப்பது நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுவது போன்ற செயல்கள் இக்கனி கொடுத்தலின் பிரதிபலிப்புகளாகும் (காண்க - லூக்கா 6:27 - 38). லூக்கா 6:36 கூறுகிறது. ''உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருப்பது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்''. பிதாவின் இரக்கமானது எங்களை உருவாக்கும் தன்மையுடையது. மீளவும் புதுப்பிக்கும் இயல்புடையது. எனவே, மனந்திரும்புதல் எனும்போது கடவுளின் இவ்வியல்புகளை ஏற்று, அவருடைய செயல்களுக்கு எங்களை உட்படுத்திக் கொள்வதே, அதனால் தான் மனந்திரும்புதல் என்பதனுடன், புதுவாழ்வும் சேர்ந்து செல்லுகின்றது.

ஆதிக்கிறிஸ்தவ சமூகம் ஊன்றக் கட்டப்பட்டிருந்ததற்கும், வளர்ச்சியுற்றதற்கும் முக்கிய காரணம் அது ஜெபம், போதனை, ஐக்கியம், அப்பம் பிட்குதல் ஆகியவற்றில் உறுதியாகத் தரித்திருந்தபடியினாலேயே. பிறருடனான தொடர்புகளை வலுப்படுத்தும் ஐக்கியம் காணப்பட வேண்டும். இரக்கம் நிறைந்த கடவுளுடன் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். கிறிஸ்துவின் பிரசன்னத்தின் நிச்சயத்தை எப்போதும் உள்வாங்கத்தக்க வகையில் அப்பம் பிட்குதலில் பங்குபற்ற வேண்டும். இவையனைத்தையும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் திருமறையின் சத்தியங்கள் வாழ்வின் ஆதாரமாக இருக்கவேண்டும். இவ்வகையில் வாழும் திருச்சபை என்றும் சாட்சியுள்ளதும், வளர்ச்சியுறுகின்றதுமான ஒரு சமூகமாகவே இருக்கும்.

டீ. எஸ். ரீ.

தாரகை ஒளி

''நான் பசியாயிருக்கையில் — அது ஒரு
உடலளாவிய பிரச்சனை;
எனது அயலவன் பசியாயிருக்கையிலோ — அது ஒரு
ஆன்மீகப் பிரச்சனை''
— நிக்கொலாய் பேர்டியாவ்


# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை,
Estd. 1841

மலர்: 155 26 — 08 — 1994 இதழ்: 18


## பழையன கழிந்தன புதியன புகுந்தன

ஸ்ரீலங்காவில் ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழுவருட ஆட்சி அஸ்தமனமாகி இப்போ பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சி உதயமாகியுள்ளது யாவரும் இனவேறுபாடின்றி நாட்டில் ஒரு மாற்றத்தையே விரும்புகிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் சுட்டுகிறது என்பதில் ஐயமில்லை கடந்த பதினேழு வருடங்களில ஐ. தே. க அரசாங்கத்தின்கீழ் மக்கள் அநுபவித்த துன்பங்கள் எண்ணிலடங்காதன உயிரழப்புகள், காணாமற் போகிற சம்பவங்கள், பொருளாதார ரீதியான பாதிப்புகள் மக்களின் உள்ளங்களை வலுவாக உலுப்பிக்கொண்டிருந்தன பலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதும் பௌத்த மதகுருமாருடன் இணைந்து செயற்பட்டு வந்து ஐ தே.க அரசு, போரை நிறுத்தி சமாதானம் பூண எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்காது, சிற்சில கண்துடைப்பு வேலைகளில் மட்டும ஈடுபட்டது இந்நேரத்தில் நடைபெற்ற ஆட்சி மாற்றம் பலரையும் மகிழ்வுக்குள் கொண்டு வந்துள்ளது.

நடைபெற்ற தேர்தல் இன்னுமொரு வகையிலும் அரசுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது அதாவது பல்வேறு எதிர்ப்புகள் மத்தியில் நிகழ்த்தப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான தேர்தலின் முடிவுகளின் அறிவிப்புகள் - உதாரணமாக - கோப்பாய் பிரதேசத்தில் பதியப்பட்ட எண்ணிக்கை சுமார் ஐம்பத்தையாயிரம். அதில் போடப்பட்ட வாக்குகள் எட்டு - என்பன போன்ற அறிவிப்புகள். ''யாழ்ப்பாணத்தின் பல இடங்களை ராணுவம் கைப்பற்றி விட்டது'' என்று கூறிக்கொண்டிருந்த அரசாங்கத்தின் முகமூடியை, அந்த அரசாங்கம் தானே கிழித்தெறிந்ததற்கு சரியாகிவிட்டது யாழ்ப்பாணம விடுதலைப்புலிகளிடமே உள்ளது என்பதை இதன்மூலம் அரசாங்கமே வெட்டவெளிச்சமாக்கியுள்ளது. ஐ தே. க வின் பல்வேறு தேர்தல் குழறுபடிகள் மத்தியிலும சந்திரிக்கா வெற்றிக்கொடி நாட்டியிருப்பது அவருக்குப் பெருமையான விடயம்.

சந்திரிக்கா பிரதமராக வந்தது யாவருடைய மனத்திலும் ஒரு திருப்பத்தினை எதிர்பார்க்கப் பண்ணுகிறது. முக்கியமாக தமிழர் மனதில் தமக்கு சமாதானம் கிடைக்குமா எனும் எதிர்பார்ப்பைத்தந்திருக்கிறது. இன விவகாரத்தை சந்திரிக்கா தன்பால் எடுத்துக்கொண்டது அதின்மேல் கூடுதலான கவனம் செலுத்த அவர் விரும்புவதை காட்டுகிறது என்பது குறிப்பான விடயம். நாம் இன்னொன்றையும் மறந்து விடமுடியாது. சுதந்திரக்கட்சி முன்னர் ஆட்சியில் இருந்தபோது அவர்கள் தமிழர்கள் மேல் கூடுதலான ஒடுக்குமுறையை பிரயோகித்தனர். ஆனாலும் ''பழைய குருடி கதவைத் திறவடி'' எனும் நிலை களைந்து பழையன ஒழித்து புதியன புகுத்த சந்திரிக்கா முயல்வார் என நம்புகிறோம்.

இங்கு குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் அண்மையில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் ''யாழ்ப்பாண மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள் புலிகள்'' என்று சந்திரிக்கா கூறியிருக்கிறார். ஒரு சிங்கள ஆட்சித் தலைவர் இவ்வாறு கூறியிருப்பது இதுவே முதல் தடவை. விடுதலைப்புலிகளும் சந்திரிக்கா பிரதம மந்திரியாக வந்தது பற்றி மகிழ்வு தெரிவித்துள்ளது குறிப்பிடத் தக்கது. மேலும் அஷ்ரப் தனது ஆதரவை இவருக்கு தெரிவித்திருப்பதும் சுட்ட வேண்டிய விடயம். வடக்கு கிழக்கு யுத்தம் ஒரு வியாபாரமாகி விட்டது என்று தெரிவித்துள்ள சந்திரிக்கா அதைத் தீர்க்க தன்னாலான எல்லா முயற்சிகளையும் எடுக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார். தேர்தலுக்கு முன்பு சொன்ன வாக்குறுதியைப் பின்பு ஊர்ஜிதப்படுத்தியிருப்பது மகிழ்வுக்குரிய விடயம்.

அறுதிப் பெரும்பான்மை இல்லாததால் தனது எண்ணங்களை நிறைவேற்றுவதில் சிக்கல், பௌத்த மதகுருமார்களினால் தனது முயற்சிகளுக்குத் தடை போன்ற பிரச்சனைகளை சந்திரிக்கா எதிர்நோக்கக்கூடும். இப்பிரச்சனையை செவ்வனே மேற்கொள்ளவும் சமாதானத்துக்குரிய கதவுகள் நிரந்தரமாக திறக்கப்படவும் அவருக்கு வேண்டிய பெலனையும் ஞானத்தையும் கொடுக்க இறைவனை இறைஞ்சுவோமாக. தமிழ் மக்களோடு இறைவன் என்றும் துணையிருப்பதை இந்த புதிய திருப்புமுனை காட்டுவதாக மக்கள் நம்புகின்றனர். இந்நம்பிக்கை வீண்போகாது நாட்டில் உண்மையான அமைதி ஏற்பட்டு எல்லா மக்களும் சுபீட்சமாக, சுதந்திரமாக வாழ கடவுள் அருள் புரிய அவரை வேண்டுவோம். பழையன கழிந்தன புதியன புகுந்தன.

வெளி 21:5 - ''இதோ நான் அனைத்தையும் புதியனவாக்குகிறேன்''

சாது சுந்தர்சிங் கதைகள்

## நீயே என் குரு



இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்ட சிறு பெண் ஒருத்தி திபெத் நாட்டின் கிராமம் ஒன்றில வாழ்ந்து வந்தாள். அவள் இயேசுவின்மேல் செலுத்தும் அன்பை அறிந்த புத்த மதகுரு அவளைக் கண்டித்தார். அவளுக்குத் தண்டனையாக மூன்று நாட்கள் உணவேதும் தராமல் அவளை ஓர் அறையில் அடைத்துப் போட்டார். தண்டனை அச்சிறுமிக்குச் சிரமமாக இருந்தபோதும், கிறிஸ்துவை விசுவாசித்தது தவறு என ஒப்புக்கொள்ளவில்லை. அவருக்காக தான் அறையில் அடைபட்டிருப்பதைக் குறித்தும் வருத்தப்படவில்லை. அங்கிருந்தவாறே எந்நேரமும் அவள் ஜெபித்துக்கொண்டிருந்தாள். அற்புதமான அமைதி அவளை நிரப்பியது. மூன்று நாட்களுக்குப் பிறகு புத்த மத குரு அந்த அறைக்குள் சென்று பார்த்தார். ஒரே ஆச்சரியம் அவருக்கு! சிறுமியிடம் 'நீ கிறிஸ்துவைப் பற்றி அறிந்திருப்பது என்ன?' என்று கேட்டார். அவள், 'அவரைப் பற்றி அதிகமாக எனக்குத்தெரியாது, ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்; நான் அவரை அறிந்திருக்கிறேன' என்றாள். அவர் அவளை அறிவற்ற முட்டாள் என்று கடிந்துகொண்டபோது மீண்டும் அவள், நான் எனது பெற்றோரை அறிந்திருப்பதைவிட அவரை நன்கறிவேன். அவர் எனக்குள்ளேயே வாழ்கிறார். உலகத்தால் கொடுக்கவோ, பறிக்கவோ முடியாத ஜீவனை இயேசு தருகிறார் என்றாள். இதைக் கேட்ட புத்த மதகுரு அந்தப் பெண்ணை மேலும் 24 மணிநேரத்திற்கு உணவின்றி அடைத்து வைத்தார். அதன் பின்பும் அவள் ஜெபித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தாள். அவள் உள்ளத்திலமகிழ்ச்சி பொங்கியது. உடல் களைப்புறவில்லை. மேலும் மூன்று நாட்கள் அந்த அறையிலேயே அடைக்கப்படும் அச்சிறுமியின் உள்ளத்தில் அமைதியும், ஆனந்தமும் குடிகொண்டிருந்தது. அதைக்கண்ட புத்த மதகுரு நெகிழ்வுற்று 'நீயே என் குரு' என்று அறிக்கையிட்டார். இயேசுக் கிறிஸ்துவை அறிந்துகொள்வது வயதையோ, கலவியையோ பொறுத்த செயலல்ல

நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருப்பதால் மெய்யாகவே என் சீடராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

— யோவான் 8 : 31, 32


# நினைவில் வைத்திருக்கவும்

## வண. டாக்டர் ஜோன் ஸ்கடர்

பிறந்த தின நினைவு நாள்
03 - 09 - 1994 (சனிக்கிழமை)

* உதவிக்குரு அபிஷேக ஆராதனை

திரு. ஈ. என். லோறன்ஸ்
(சாவகச்சேரி ஊழியன்)

திரு. ரி. ஜெயச்சந்திரன்
(நுணாவில் ஊழியன்)

திரு. எட்வேட் ஜெயராஜா
(செட்டிக்குளம் ஊழியன்)

திரு. கே. ஏ. செல்வநாயகம்
(சண்டிலிப்பாய், அளவெட்டி ஊழியன்)

* ஜோன் ஸ்கடர் நாடகம்
(கிறிஸ்தவ இறையியல் கல்லூரியினர்)

* பகிரங்கக் கூட்டம்

# THE MORNING STAR

**Diocesan, Office Vaddukoddai 26 - 08 - 1994**

**EDITORIAL**


## "Giving Every Man His Due"

Aristotle defined justice as "giving every man his due". Quoting John Bennett, former President of Union Theological Seminary, New York, Robert McAfee Brown gives an even better definition for onr own day: "giving every child his due". He says that if a child is deprived of food, clothing, education etc., etc., the society in which that child lives is unjust and is engaging in violence against that child.

Seventeen years of UNP rule has come to an end and Chandrika Kumararanatunge, has sworn in as the new Prime Minister. Once again SLFP is in power. It has secured 3,887,799 votes against UNP'S & 3,498,172. It is quite obvious that people wanted a change. Chandrika has been constantly saying that her goverment would go for unconditional talk with the LTTE for a reasonable solution for the ethnic problems if it came to power. She has even asserted this once she was sworn in. The LTTE Office in London has welcomed her suggestion. People express hope.

Our community's experience has been that it believes that help comes from hopelessness and helplessness. We can not simply forget that the UNP and SLFP have been in power for solong to have understood our aspirations. But some are hopeful that Chandrika has a clear vision of what is going on and that she may be able to go the second-mile for working out a solution that will be accepted by our community. There are many obstacles stand in the way of the present government. It does not have the absolute majority, a UNP person is the President who has executive power. The new Premier should have the courage to see the things as they are. She should understand and make it clear to her government and the Sinhalese masses that the Tamils are not asking something new. It is not a favour that is called for. Thanthai Chelvanayagam said, "We are not asking for a division of the country by our movement but we are only trying to regain what we have lost ..." ( Ref. Hansard 19 - 11 - 76 ).

If Chandrika thinks she heads a government that is concerned about justice, she will also realize that to do justice is to sort out what belongs to whom and to return it to them. "The basic cause of most violent revolt is injustice and inequity, violation of personhood, and symbolic violence", said Thomas Rose. "Spiral of Violence" is a small book written by Archbishop Dom Helder Camara. He says that it is because of the injustices of our society that the spiral of violence initially gets launched, and until and unless we get the roots of injustice, we will be dealing in only a superficial way with the problem of violence. Injustice ( violence ) of the oppressor begets violence (revolt) of the oppressed.


It is the task of the new Prme Minister to start afresh to impemelnt justice. If she starts with an unbiased mind, it will not take too long for her to assert that justice is "restoration of one's own" and it is simply giving back to someone somethings which infact belongs to that 'someone'

Give everyone his or her due!!

### Lions Club

(Continued from page 1)
nery for poor school children, milk food supply to orphan children, free issue of clothes to refugee camps. free issue of spectacles to needy and medical clinics at seven refugee camps-Seminars on cholera, Diabetics including screening and environment;. Four months week-end Agricultural training classes for the displaced, educated, unemployed youths. Seminars and woskshop for youths involved in Agriculture fund raising for Region VI cancer project and for sight first project. lunch to inmates at an orphanage home a day in a month monthly lectures and film shows on health problems and vaccination of 1.000 birds for ranikhet disease in the service area and free issue of vegetable seedling and fruit plants to farmers.

**All Jaffna Inter - Schools Winners**



**Uduvil Girls' College (u - 19) Team**

## An Appreciation
## Pastor Marcus Navaratnarajah

British Columbians, Sri Lankans Multi - cultural and Evangelical Communities were shocked by the sudden death of Pastor Marcus on May 15th 1994. Marcus had been known since early 50's for his enthusiastic work with SCM and JICCF. Scouting was his other speciality. As a Programme Director at the Y' he could be well remembered for his dynamic and hilarious eadership. His move to kowloon YMCA in Hong Kong was a loss to 'Y' in Sri Lanka, but a gain to Hong Kong. During this period in Hong Kong he became actively involved in the "ASIA EVANGELISTIC FEL LOWSHIP" based in Singapore.

When he left with his family to become a Canadian in the 80's his evangelical spirit grew even stronger. The need for the Asians in the West Coast of Canada was felt deeply by him. Thus he become the cynosure for several christians and non - christians of Asian origin Let them be from Phillipines, Malaysia, Hong Kong, Singapore, Fiji or Sri Lanka Marcus was there as a comforter, guide and above all a spiritual promoter to introduce the power of christian faith

With such expertise and talent he was an easy choice to be an active participant in the Multi cultural Societies in British Columbia His annual role as Master of Ceremonies at the Richmond Multi-fest is a testimony to it He did not stop there. he went on to organise "A PRAYER CHAIN for the needy and visited people who were in dire straits. Settling refugees and accommodating them were another feature of his ministry Tamil refugees from his own district were passionatly dealt with FELOW SHIP in 1990 SLCF meets once every two months for PRAYER, WORSHIP, MEDITATION & SOCIALISATION.

The pinnacle of his christian witness went on when he was accepted as a PASTOR under B C. Baptist Conference and Marcus became the founder member of the HOSSANNA INTERNATIONAL CHRISTIAN CHURCH This church reflects the multi ethnicity in the province and cater the need for all. The vision of Marcus came to light.

His funeral service was held at the Boardmoor Baptist Church in Richmond B. C. on May 21st 1994 amidst very large gathering. District Executive Minister of B. C Baptist conference Paster Wally Weiser led the service and gave the message Tributes were paid by Mr Jonathan James of ASIA EVANGLICAL FELLOWSHIP (Singagapore) and Mr John Garrision of HOSSANA INTERNATIONAL CHURCH. The Multi-cultural TRIO including his daughter TAMARA rendered a special song, and the Pastors of the district sang "IT IS WELL WITH MY SOUL" and dedicated it to MARCUS.

Service came to an end with the entire congregation holding hands and singing "BIND US TOGETHER". He was burried at the Boundary Bay Cemetery and the committal rites were performed by Pastor Tim Colbourne and Pastor Wally Weiser.

After the burial, people gathered at the church for fellowship lunch, where Tributes, Witnesses and Appreciations were given by a large number which lasted over an hour Pastor Marcus leaves behind his beloved wife Dhiviam daughter Tamara, son-in-law Don and a host of close family members. and an array of faithful.

May his soul Rest in Peace.

C. T Premarajah
3260 Blundell Road
Ricmond B 7 VCIG3

*Registered as a News paper at the P. O. Sri Lanka under No. QIJ/14089 News Printed for the Jaffna Diocesan of the Church of south India at Arun Printers and Publishers, 15. 2nd lane, Jaffna. on Friday the 26th of August 1994 and Publ:shed by Mr. T. A. TAMBIYAPPA Diocesan Office, Vaddukoddai.*